

சென்னை, சோழவரத்தில் நடைபெற்ற, சென்னை வடகிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சன் முனியாண்டி, கவிதா இல்லத் திருமண விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மணமக்கள் எம்.சந்தோஷ் பாண்டியன், எஸ்.தர்ஷினி (ஏ) அரசி ஆகியோரை வாழ்த்தினார்.



தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் – இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர இளைஞரணி அமைப்பாளர் முகம்மது ராஷிக் ஹனீப் – மரியம் பாத்திமா ஆகியோர் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பூவிருந்தவல்லி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், நகரச் செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை, என்.இ.கே.மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ் குமார் மற்றும் மாநில, மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### நாமக்கல் கவிஞர் மாளிகையில் சொகுசு அறை – ஊருக்குத்தான் உபதேசமா?

# ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்யாதீங்க முதல்வரே!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, செப்.22-

கடலைப் பார்த்து முதல்வர் அமர வேண்டும் என்ற மூடநம்பிக்கையில் பல கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தில் கலைஞர் அவர்கள் கட்டித்தந்த நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10 வது மாடியை ஷூட்டிங் செட் மற்றும் சொகுசு அறைகள் அமைக்கிறீர்களே! உங்களுக்கு நினைவிருக்கிறதா? "ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்யாதீங்க" என்று ரீல் விட்டீங்களே ஊருக்குத் தான் உபதேசமா? CMsir? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-

நூற்றாண்டு பழமையான தமிழ்நாடு சட்டமன்றத்தில் தான் இந்தியாவிலே முதன்முதலாக நீதிக்கட்சி ஆட்சியில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. கலைஞர் அவர்கள் ஆட்சியில் பெண்களுக்கு உள்ளாட்சியில் 33 சதவீத இட ஒதுக்கீடு மற்றும் "பெண்களுக்கு சொத்தில் உரிமை" வழங்கும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அரசு பணியில் இருக்கும் பெண்களின் முதல் இரண்டு பிரசவத்திற்கு ஓராண்டு சம்பளத்துடன் கூடிய விடுப்பும், பள்ளி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு "முதல்வரின் காலை உணவுத் திட்டம்" உட்பட பல சமூக நீதி மசோதாக்கள் கொண்டு வந்து இந்தியாவிற்கே வழி காட்டியது நம் தமிழ்நாடு சட்டமன்றம் என்பது தெரியுமா CMsir?

முதல்வரே உங்களுக்கு தற்போதைய சட்டமன்ற கட்டடம் பிடிக்கவில்லையா? அல்லது சட்டமன்றத்தில் உள்ள தலைவர்களின் திருவுருவப்படங்களை பார்ப்பது பிடிக்கவில்லையா?

கடலை பார்த்து முதல்வர் அமர வேண்டும் என்ற மூடநம்பிக்கையில் பல கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தில் கலைஞர் அவர்கள் கட்டித்தந்த நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10 வது மாடியை ஷூட்டிங் செட் மற்றும் சொகுசு அறைகள் அமைக்கிறீர்களே! உங்களுக்கு நினைவிருக்கிறதா? "ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்யாதீங்க" என்று ரீல் விட்டீங்களே ஊருக்குத்தான் உபதேசமா? CMsir?

காலம் காலமாக கடலைப் பார்த்து கடல் தாயை வணங்கி உயிரை பணயம் வைத்து மீன்பிடி தொழில் செய்து வரும் மீனவ மக்களை கடலில் தள்ளி விட்டு, விட்டு அவர்களின் நிலத்தை அபகரித்து புதிய சட்டமன்றம் கட்ட துடிப்பது மீனவ மக்களுக்கு செய்யும் துரோகம் இல்லையா CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### தாராபுரம் – மதுராந்தகம் தொகுதிகளில்

# கழக இலக்கிய அணியினர் தீவிர திண்ணைப் பிரச்சாரம்!

## கவிச்சுடர் கவிதைப்பித்தன் – நாகை சந்திரபாபு தலைமை!

சென்னை, செப்.22-

தாராபுரம் தொகுதியில் கழக இலக்கிய அணியின் துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதை பித்தன் தலைமையிலும் மதுராந்தகம் தொகுதியில் கழக இலக்கிய அணி பொருளாளர் நாகை சந்திரபாபு தலைமையிலும் தீவிரமான வாக்கு சேகரிப்பு திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் வெற்றிக்காக இலக்கிய அணிப் பொருளாளர் நாகை சந்திரபாபு அவர்களின் தலைமையில் கழக சொற்பொழிவாளர்கள் கந்திலி கரிகாலன் தக்கோலம் தேவபாலன் ஆவடி பாஸ்கர் அத்திப்பட்டு சாம்ராஜ் உள்ளிட்ட மேலும் சில கழக சொற்பொழிவாளர்களும்

#### இல்லம் தோறும் மக்கள் சந்திப்பு!

தாராபுரம் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா வெற்றிக்காக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதை பித்தன் தலைமையில் கழக சொற்பொழிவாளர்கள் ஆடுதுறை உமாபதி கரூர் முரளி வரகூர் காமராஜ் பசும்பொன் ரவிச்சந்திரன் உள்ளிட்ட மேலும் சில கழக சொற்பொழிவாளர்களும் வாக்குகளை சேகரிக்க தீவிர திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

மக்களை நேரடியாக இல்லம்தோறும் சென்று சந்தித்து கழக அரசு அமையாத காரணத்தினால் தமிழ்நாடு படும் துன்பங்களும் வேதனைகளையும் அவமானங்களையும் ஒவ்வொரு வீடாகச் சென்று எடுத்து கூறி தேர்தல் பிரச்சார இறுதி நாள் வரை தேர்தல் பணியாற்றுவது என்று தலைமைக் கழக இலக்கிய அணி சார்பில் கூறப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய இலக்கிய அணியின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆர்வத்தோடு ஆங்காங்குள்ள மாவட்டச் செயலாளர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப மேற்கண்ட இரு தொகுதிகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தீவிரமான திண்ணை பிரச்சாரத்தில் ஒன்றுபட்டு ஈடுபட வேண்டும் என்றும் வெற்றிக் கனியை கழகத் தலைவர் கரங்களில் ஒப்படைக்க உறுதி ஏற்று உழைத்திட வேண்டும் என்றும் தலைமை கழக இலக்கிய அணி சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### மும்பை புறநகர் தி.மு.க.

# கோரேகாவ் ஆரே மில்க் காலனி சார்பில் முப்பெரும் விழா!

## தமிழன் பிரசன்னா சிறப்புரை! அலிசேக் மீரான் முன்னிலை!

மும்பை,செப்.22-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்கவிழா, தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்தநாள் விழா முதலிய மூன்று நாட்களை இணைத்து முப்பெரும் விழாவாக கோரேகாவ்ன் பகுதியில் உள்ள ஆரே மில்க் காலனியில் வைத்து வருகிற 26-09-2026 சனிக்கிழமையன்று ஆரே காலனி, யூனிட் எண்: 7 நெல்லை விநாயகர் கோவில் திடலில் வைத்து புறநகர் மாநில தி.மு கழகப் பொறுப்புக் குழு உறுப்பினர் சிவக்குமார் சுந்தர்ராஜ் தலைமையில் மாலை சரியாக 6.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

தி.மு கழக மாநில செய்தித் தொடர்பு இணைச்செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா சிறப்புரையாற்ற உள்ளார்.

புறநகர் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தந்தை பெரியார் படத்தையும், பொறுப்புக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசன் பேரறிஞர் அண்ணா படத்தையும்

கழக மூத்த முன்னோடி தர்மலிங்கம் கலைஞர் படத்தையும் திறந்து வைக்கவுள்ளார்கள்.

பொறுப்புக்குழு உறுப்பினர் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்கவுரையும் மும்பை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்தகுமார் தொகுப்புரையும் ஆற்றவுள்ளார்கள்.

ஆரே காலனி கழக மூத்த முன்னோடிகள் துரைராஜ் வரவேற்புரையும் கனகராஜ் நன்றியுரையும் ஆற்றுகிறார்கள்.

நிகழ்வில் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி கிருஷ்ணன், அ.இளங்கோ வே . ச தா ன ந் த ன் , வெ.அ.ஜெய்னுல்லாபுதீன், வீரை சோ பாபு, மெஹபூப் பாஷா, எஸ்.பி.குமரேசன் , சிலுவை தாசன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கவுள்ளார்கள்.

மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் .இரவிச்சந்திரன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் பாவலர் நெல்லை பைந்தமிழ், அம்பர்நாத் கிளைச் செயலாளர் முத்தமிழ் தண்டபாணி, முகமது அலி ஜின்னா, பாண்டு, (ஆரே காலனி கிளை), பொய்சர் மூர்த்தி, ஆகியோரும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்கள்..

கல்யாண் கிளைக் கழக அவைத்தலைவர் க.ஜீவானந்தம் , எஸ்.பி.செழியன், இரஜகை நிலவன், ஜோகேஸ்வரி தமிழினநேசன், தானா கிளைச் செயலாளர் அ.பாலமுருகன், முலுண்டு கிளைச் செயலாளர் எஸ்.பெருமாள் வாஷி பழனி , முத்து, அ. பால சுப்ரமணியம் பிவண்டி முஸ்டாக் பாய், லத்தீப் பாய், முலுண்டு சங்கர சுப்பு, வாஷி கிளைக் கழகத் தோழர்கள், தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, ஜி. பசுபதிநாதன், சயான் சு.சுடலையாண்டி, பகத் சிங் நகர் ரவி, மொகிதீன், செம்பூர் நம்பி , சீதா கேம்ப் ராஜேந்திரன், ஆழ்வார், திவாவேல் முருகன் அந்தேரி எம். பொன்மணி, பரமசிவம் (செம்பூர்) பாண்டூப் செல்லத்துரை, உதயசூரியன், ஆனந்த ரமேஷ் க.சுந்தர், (பாண்டூப் கிளை)

செய்யதுபாய், ராமு, (அம்பர்நாத் கிளை) ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

சேகர் சுப்பையா, கனகராஜ், தமிழ்ச் செல்வன், சுரேஷ் குமார், கட்டமுத்து, முனியன் கோவிந்தராஜ், கிருஷ்ண மூர்த்தி கணேசன் பொன்னுசாமி, கனிமொழி முருகபிள்ளை, கனிமொழி தமிழரசன் ஆகிய ஆரே காலனி கிளைக் கழகத்தைச் சார்ந்த விழாக் குழுவினர் அனைவரும் விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா மூலனூர் ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஒன்றியக் கழகச் செயலாளர் ப.பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் வீதி வீதியாகச் சென்று பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.சி.தங்கம், கே.சி.பாலு, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் நா.செல்லமுத்து, பேரூராட்சி தலைவர் சிக்கந்தர் பாட்ஷா உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# வட அமெரிக்கா மேற்கு மண்டல தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் 148வது பிறந்தநாள் விழா!

## கலிபோர்னியாவில் எழுச்சியுடன் நடைபெற்றது!

கலிபோர்னியா, செப்.22–

சமூக நீதிக் காவலர் தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்த நாள் விழா வட அமெரிக்க வளைகுடாப் பகுதியின் பிரிமாண்ட் நகரில் உள்ள இர்விங்டண் சமூகக் கூடத்தின் வளாகத்தில், செப்டம்பர் 13ம் நாளன்று மாலை 4:30 மணியளவில் தொடங்கியது. வட அமெரிக்காவின் மேற்கு மண்டல தி.மு.க அணி (DMK USWEST) மற்றும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் வட அமெரிக்க மேற்கு மண்டல உறுப்பினர்கள் (NRTIAUSWEST) வளைகுடாப் பகுதியின் சமூக நீதிசார் அமைப்புகளான சம உரிமைக்குரல் அறக்கட்டளை (Equal Voice Foundation), அம்பேத்கர் கிங் படிப்பு வட்டம் (Ambedkar King Study Circle), Indian American Muslim Council, AIDINDIA, Hindus For Human Rights, India Civil Watch ஆகியவற்றுடன் சேர்ந்து நடத்திய இந்நிகழ்ச்சி சுமார் நூறு பேரைக் கொண்டு அரங்கம் நிறைந்த வெற்றி பெற்ற நிகழ்ச்சியாக நடந்தேறியது.

அயலக தி.மு.க. மற்றும் NRTIA சார்பில் கலிபோர்னியா கார்த்திக் ”சம உரிமைக்குரல் அறக்கட்டளையை அறிமுகம் செய்து உரையாற்றினார். தோழர்கள் பெரியார் சாலை சாவித், பாலாசி ராசவேலு, சலீம் அகமது, பொய்யாமொழி பழனியப்பன், சங்கர் கணேசன், பொன். தண்டபாணி, ஆனந்தன் ராசேந்திரன், விஜயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

#### அமெரிக்காவில் பெரியார்!

இந்நிகழ்ச்சியில் தமிழ் நாட்டிலிருந்து சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் சாநவாசு அவர்கள் இணைய வழியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார். ”ஏன் இன்றும் பெரியாரின் அரசியல் தேவைப்படுகிறது? என்ற கேள்வியைத் தலைப்பாகக் கொண்டு தெள்ளத் தெளிவாகவும், விரிவாக வும் அவர் ஆற்றிய உரை, கலந்து கொண்டோர் அனைவரின் ஆரவாரத்தையும், கைத்தட்டல்களையும் பெற்றதாக இருந்தது.

இன்றைய தமிழ் நாட்டின் அரசியல் நிலையையும், இந்திய ஒன்றிய அரசியலின் நிலையையும் சாடி அவர் ஆற்றிய உரையானது ”கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல் என்ற குறளுக்கு பொருந்தி அறிவுக் கண்களைத் திறந்த வண்ணம் அனைவரின் ஆதரவையும் பெற்று, சிறந்து விளங்கியது.

வட அமெரிக்காவின் வளைகுடாப் பகுதியில் உள்ள Affordable Housing Network of Santa Clara Countyயின் தலைவர் சாண்டி பெர்ரி (Thiru. Sandy Perry) அவர்கள் ”அமெரிக்காவில் அடிப்படை உரிமைகள் மற்றும் சமூக நீதி கண்ணியத்திற்கான போராட்டம் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். தாங்கத்தகு மற்றும் மலிவு விலைக் குடியிருப்பு களுக்காகத் தொடர்ந்து போராடி வரும் இவர், தம் வாழ்நாள் சமூகப்பணிகளில் சந்தித்த இன்னல்களையும், Santa Clara மாவட்டத்தில் அவர் போராடிப் பெற்ற குடியுரிமை சார்ந்த வெற்றிகளையும் பகிர்ந்து கொண்டதுடன், அதைச் சார்ந்த தொடர்ச் சிக்கல்கள் இன்றும் எவ்வாறு சமூக நீதிக்கு சவால்களாக நீடிக்கின்றன என்பதைப் பற்றி எடுத்துரைத்தார்.



#### நெஞ்சை நெகிழவைத்த நிகழ்ச்சி!

New Haven Unified School Districtன் நிர்வாகக் குழுவின் தலைவரான திருமதி. சாம்சா ரபே (Tmt. Shamsa Rafay) அவர்கள் மற்றுமொரு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ”கலிபோர்னிய பள்ளிகளில் சமூக நீதிசார் கல்வி பற்றி சிறப்புரை யாற்றினார். அவர் கலிபோர்னியப் பள்ளிகளின் பாடத்திட்டங்களில் இருக்கும் சமூக நீதிப் பிரச்சனை களைப் பற்றிப் பேசி, பெரியாரின் பெண் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கைகளை அடிக்கோடிட்டு அது எவ்வாறு உலகின் எல்லா மூலைகளிலும் கல்விக்கான சமூக நீதிக் குரலாக ஓங்கி நிற்கிறது என்று புகழ்ந்தது பெரியாரின் பற்றாளர்களுக்கு பெருமிதம் தேடித் தந்த தருணமாக இருந்தது.

பறையிசையில் தொடங்கிய நிகழ்வு, பெரியாரைப் போற்றும் கானாப்பாடலில் தொடர்ந்து, நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாய் அமெரிக்கக் குழந்தைகள் இணைந்து கேக் வெட்டி, ”Happy Birthday to you, Dear பெரியார் தாத்தா! என்று பாடி மகிழ்ந்தது பெரியார் பிறந்த நாளினைக் கொண்டாடியது காண்போர் அனைவரின் கண்களுக்கு விருந்தாகவும், நெஞ்சை நெகிழச் செய்ததாகவும் இருந்தது.

பெரியாரின் அடுத்தத் தலைமுறையினரின் ஆர்வத்தையும் பேரன்பையும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் பெற்றனர் என்றால் அது மிகையாகாது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் நிகழ்ச்சியின் வெற்றியையும் கலந்து கொண்டதின் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொண்டனர். வட அமெரிக்காவின் வரலாற்றில் பெரியார் சார்ந்த விழாவொன்றுக்கு இத்துனைப்பேர் கூடிய முதற்கூட்டம் இதுவே ஆகும் என்ற பெருமிதத்தோடு அமெரிக்க தி.மு.க.வைச் சேர்ந்த உடன்பிறப்புகள் வீடு திரும்பினர்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!

